**விலவூர் முதல்நிலை பேரூராட்சி**

**கன்னியாகுமரிமாவட்டம்**

ந.க.எண்.390/ 2022/அ1

நாள்.1507.2022

**மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கன்னியாகுமரி மாவட்டம், **விலவூர்** முதல் நிலை பேரூராட்சியில் 2021 -22ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் மின் கலம் (Battery Operated Vehicle) மூலம் இயங்கும் வாகனம் கொள்முதல் செய்திட தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 29.7.2022 **ஆம்** தேதி **வெள்ளி** கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 27.07.2022 **ஆம்** தேதி **புதன்** கிழமை பிற்பகல் 5.00 மணி வரை அதற்குரிய தொகையை கீழ்க்கண்டுள்ள விவரப்படி **விலவூர் முதல்நிலை** பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி (வரிஉட்பட) பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட இரண்டு உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், திறப்பு தேதி மற்றும் நேரவிவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும், ஒப்பந்தப்புள்ளியுடன் பணிக்கான வைப்புத் தொகையினை "Executive Officer, Vilavoor Town Panchayat" எனும் பெயரில் வங்கிவரை வோலை எடுத்து இணைத்து அனுப்ப வேண்டும்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 29.07.2022 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும்.

| வ.எண் | பணிகளின்விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) | முன் வைப்புத் தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி படிவ கட்டணம் | பணிமுடிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | **மின்கலன் (Sealed Lead Acid)- மூலம் இயங்கும் 8எண்ணிக்கை வாகனங்கள் கொள்முதல் செய்தல்** | 1240000/- | 12400/- | 8930/- | 30 நாட்கள் |

**நிபந்தனைகள்**

1. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக்குழுவில் மின்கலன் (Sealed Lead Acid) மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக்குறிப்புகளின்படி (Specifications) வாகனங்கள் இருக்க வேண்டும். மேலும் ,மின்கலன் (Sealed Lead Acid) வாகனத்திற்கு ஒரு வண்டியின் அடிப்படை விலை ஜி.எஸ்.டி (5 சதவீதம்) நீங்கலாக ரூ.1.55 இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலைக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட வேண்டும்.
2. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000இன்படி ஒப்பந்தப்ள்ளிகள் பரிசீலக்கப்படும்.
3. நிர்ணயிக்கப்பட்ட டேவணி தொகை வங்கி வரைவோலையாக இணைக்கப்பட வேண்டும் இவைகள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரம் கொண்டு எற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள் முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற் கொண்டு, துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக்குறிப்புகள் (Specifications) மற்றும் விலை விகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதிச்சான்றிதழ் அளித்த பின் சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய விதி முறைகளின் படி பட்டியல் தொகை வழங்கப்படும்.

5 உரியகாலத்திற்குள் வாகனங்கள் விநியோகம் செய்ய தவறினால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

6 வாகனங்கள் விநியோகம் செய்யப்பட்டு ஓராண்டு காலத்திற்கு வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்தப் பத்திரத்தில் இடம் பெற வேண்டும்.

7 ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமானவரி மற்றும் சரக்கு சேவைவரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.

8 ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட பணிக்கு மூன்றாண்டுகளுக்கு குறையாமல் முன்அனுபவம் உள்ளதற்கான ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்

9 ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும் போது விற்பனைவரி துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

10 ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகு கொள் முதல் ஆணை வழங்கப்படும். பணி ஆணை வழங்கப்படும் போது கூடுதல் 1% வைப்பு தொகை செலுத்தப்பட வேண்டும். மேலும் கொள்முதல் ஆணை ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ. 50/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கப்பட வேண்டும்.

11 கொள் முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கு பட்டியல் தொகை வழங்கப்படும் போது ஜி.எஸ்.டி 2% பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

12 அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் வைப்புத் தொகைத் இன்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதும் இன்றி தள்ளுபடி செய்யப்படும்.

13 செலுத்தப்படும் வைப்பு தொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.

14 மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் http://www.tenders.tn.gov.in/ , https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்தும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கலாம்.

15 இதர நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல்அலுவலர்,

முதல்நிலைபேரூராட்சி,

**விலவூர்**

15/07/2022

பெறுநர்

1. சம்மந்தப்பட்ட நிறுவனங்கள்
2. அலுவலக அறிவுப்பு பலகைக்கு

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
3. உதவி செயற் பொறியளார், நாகர்கோவில் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
4. இளநிலை பொறியாளர், **கோதநல்லூர்** பேரூராட்சி (தொகுப்பு)
5. தலைவர், **விலவூர் முதல்நிலை** பேரூராட்சி அவர்களுக்கு தகவலுக்காக.